13-02-2014 Dinathanthi

### மெட்ரோ ரெயில் சேவைக்காக

# அரசினர் தோட்டம்-எல்.ஐ.சி. இடையே சுரங்கம் தோண்டும் பணி தொடக்கம்

## 'கிராக் மீட்டர்' மூலம் கட்டிடங்கள் கண்காணிக்கப்படுகிறது

சென்னை, பிப்.13–

மெட்ரோ ரெயில் சேவைக்காக அரசினர் தோட்டம் – எல்.ஐ.சி. இடையே சுரங்கம் தோண்டும் பணி நேற்று தொடங்கியது. சாலையின் அருகில் உள்ள கட்டிடங்கள் 'கிராக் மீட்டர்' மூலம் கண்காணிக்கப்படுகிறது.

### மெட்ரோ ரெயில் சேவை

சென்னையில் ரூ.14,600 கோடி மதிப்பில் 2 வழித்தடங்களில் மெட்ரோ ரெயில் சேவைக்கான 32 ரெயில் நிலையம் மற்றும் இதனை இணைக்கும் வகையில் ரெயில் பாதைகளும் அமைக்கப்பட்டு வருகிறது. வண்ணாரப்பேட்டை முதல் விமான நிலையம் வரை 23.1 கிலோ மீட்டர் தூரம், சென்டிரல் முதல் பரங்கிமலை வரை 22 கிலோ மீட்டர் தூரம் உள்பட 45.1 கிலோ மீட்டர் தூரம் பணி நடந்து வருகிறது.

இதில் முதலாவது வழித்தடத்தில் வண்ணாரப்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை 14.3 கிலோ மீட்டர் தூரம் சுரங்கப்பாதையும், 2–வது வழித்தடத்தில் சென்டிரல் முதல் அண்ணாநகர் 2–வது நிழற்சாலை வரை 9.7 கிலோ மீட்டர் வரையில் சுரங்கப்பாதையும் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த சுரங்கப்பாதையில் 17 ரெயில் நிலையங்களும் அமைக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:–

### சுரங்க பணிகள் நடந்து வரும் பகுதிகள்

மெட்ரோ ரெயில் சேவைக்காக சென்னையில் வண்ணாரப்பேட்டை – எழும்பூர், மேதின பூங்கா – சென்டிரல், மே தின பூங்கா – ஏ.ஜி. டி.எம்.எஸ், சைதாப்பேட்டை – ஏ.ஜி. டி.எம்.எஸ், நேரு பூங்கா – எழும்பூர், பச்சையப்பன் கல்லூரி– கீழ்ப்பாக்கம், பச்சையப்பன் கல்லூரி – ஷெனாய் நகர், பச்சையப்பன் கல்லூரி – நேரு பூங்க, கீழ்ப்பாக்கம் – நேரு பூங்கா, ஷெனாய் நகர் – திருமங்கலம் ஆகிய மார்க்கங்களில் சுரங்கம் தோண்டும் பணி நடந்து வருகிறது.

மொத்தம் 36 ஆயிரத்து 308 மீட்டர் சுரங்கப்பாதையில் ஜனவரி 31–ந் தேதி வரை 11 ஆயிரத்து 837 மீட்டர் தூரம் சுரங்கம் தோண்டப்பட்டு உள்ளது. இது மொத்த சுரங்கம் தோண்டும் பணியில் 32.6 சதவிகிதமாகும்.

### அரசினர் தோட்டம் – எல்.ஐ.சி.

அண்ணா சாலையில் உள்ள அரசினர் தோட்டம் ரெயில் நிலையத்திலிருந்து எல்.ஐ.சி. அலுவலகம் நோக்கி சுரங்கம் தோண்டும் பணி நேற்று தொடங்கியது. இந்த பணி தேனாம்பேட்டை வரை 3,616 மீட்டர் அதாவது 3.5 கிலோ மீட்டர் தூரம் தோண்டப்படுகிறது. தினசரி மாதம் 800 மீட்டர் முதல் ஆயிரம் மீட்டர் வரை சுரங்கம் தோண்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இந்த பணி சராசரியாக 3 அல்லது 4 மாதங்களில் முடிக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

சென்னையில் இதயப்பகுதியான அண்ணா சாலையில் வர்த்தக நிறுவனங்கள், அரசு அலுவலகங்களுக்கு சொந்தமாக நூற்றுக்கணக்கான கட்டிடங்கள் உள்ளன. இந்த சுரங்கம் தோண்டும் பணியால் கட்டிடங்கள் பாதிக்காமல் இருப்பதற்காக "கிராக் மீட்டர்" மூலம் சாலையில் உள்ள கட்டிடங்கள் விரிசல் ஏற்படுகிறதா? என்றும் கண்காணிக்கப்பட்டு, பாதுகாப்பான முறையில் பணி முடிக்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.